## தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 ஆகஸ்ட் 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

நிறுவனத்தால் குறித்த திகதியில் பின்வரும் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது 03 தாமதத்தின் பின்னர் 2019 மே 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் முதலாவது தடவை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது எமது அலுவலகத்தில் கணக்காளர் ஒருவர் இல்லாதிருந்தமையால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதனால் அந்தப் பிரச்சினைகளை தீர்த்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தாமதம் ஏற்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த தேவைகளுக்குப் புறம்பான சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 267/2018 இன் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்களின் படி நிதிக்கூற்றுக்களின் பெறுமதி மற்றும் தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஏசீஏ- எப் படிவத்தின் கீழுள்ள நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் முற்பண பெறுவனவாக காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 771,682 தொகையான பெறுமதி உள்ளடக்கப்படவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 267/2018 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஏற்பட்டுள்ள பல்வேறு கைத்தவறுகள் மற்றும் குறைபாடுகள் இனங்காணப்பட்டு எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இயலுமானவரை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் ஏசீஏ-2 படிவத்தில் குறிப்பிடப்பட்ட நி.பி. 66/69 மாற்றல்களின் கீழ் உப கூட்டுத்தொகை மற்றும் மொத்த கூட்டுத்தொகை பெறுமதி பூச்சியமாக இருக்க வேண்டிய போதிலும் அதில் ரூபா 1,257,500 தொகை மற்றும் ரூபா 1,940,500 என்ற பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. | நி.பி. 66/69 மாற்றல்களின் கீழ் உப கூட்டுத்தொகை மற்றும் மொத்த கூட்டுத்தொகை என்பவற்றின் பெறுமதி பூச்சியமாக இருக்க வேண்டும். | எக்ஸல் சீட்டு பத்திரங்களில் சூத்திரம் மூலம் உரிய புள்ள்விபரரீதியான பெறுமதிகளில் ஈடுபடுத்தும் போது ஏற்பட்ட வழுக்களினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. |

(ஆ) வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 565 இன் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு பேணப்படாதிருந்தமையால் அலுவலகத்திற்கு 2018 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 10,155 பணம் மற்றும் ரூபா 8,455 கொடுப்பனவுகள் தொடர்பான குறிப்புக்கள் காசேட்டில் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 565 இன் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பொது வைப்புக் கணக்கு தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம் |

(இ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6 படிவம்) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 10,476,145 ஆக இருந்த போதும் அத்திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் அப்பெறுமதி ரூபா 10,556,145 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆண்டில் அகற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சீராக்குவதற்கு முன்னுள்ள பெறுமதி காண்பிக்கப்பட்டிருந்தது. அதனால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அப்பெறுமதி ரூபா 80,000 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ii) | மீளாய்வாண்டில் மாற்றங்களின் மூலம் மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கூட்டு மொத்தமாக ரூபா 91,500 பெறுமதியில் சொத்துகக்ள் அகற்றப்பட்டிருந்தடுன் அந்த சொத்துக்களின் கியைத்திற்குப் பதிலாக நிதி கூற்றுக்களில் ஏசீஏ-6 படிவத்தின் கீழ் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் அகற்றப்பட்டவைகளின் கீழ் ரூபா 80,000 தொகை குறைத்துக் | நிதி கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அகற்றப்பட்டவைகளின் கீழ் ரூபா 80,000 ஆகக் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 91,500 ஆக திருத்தப்பட வேண்டியுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டிற்காக சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் சொத்துக்கள் மீதியில் தயாரிக்கப்படாதிருந்தமையால் மற்றும் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சொத்துக்கள் அறிக்கை (ASSETS REPORT) அலுவலகத்தால் பெறப்படாமையால் அந்த சொத்துக்களின் மீதிநிதிக் கூற்றுக்களில் ஏசீஏ- 06 படிவத்தின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள சொத்து மீதியுடன் இணக்கம் செய்யப்படவில்லை. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்படுகின்ற சொத்துக்களின் அறிக்கையுடன் நிதியல்லாத சொத்துக் கூற்றுக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சொத்துக்களின் மீதி இணக்கம் செய்யப்பட வேண்டும். | எங்கள் அலுவலகத்தில் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் 2019 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் அதில் ஏற்பட்டுள்ள வழுக்களின் நிலைமையின் காரணமாக சொத்துக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்குவதற்கு முடியாதுள்ளது. இதனால் சொத்துக்கள் அறிக்கையைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. |
| (iv) | 2018 சனவரி 01 ஆம் திகதி மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் (ஏசீஏ- 06 படிவம்) நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்ட குறியீட்டு இலக்கம் 61122 ஏனைய இயந்திரம் மற்றும் உபகரணங்கள் மீதி மற்றும் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள அந்த மீதிகளுக்கிடையே 2018 சனவரி 01 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 963,327 தொகையான வேறுபாடும் மற்றும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 926,882 தொகையான வேறுபாடும் காணப்பட்டன. | நிதிக் கூற்றுக்களில் சரியான பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டும். | இந்த நிறுவனத்தின் நிலையான சொத்துக்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதி சரியான மூலங்களுடன் 2008 சனவரி 01 ஆம் திகதியின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களில் மாத்திரமே சரியான பெறுமதி குறிப்பிடப்பட்டள்ளது. அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி 2014 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் காணப்பட்ட மொத்த சொத்துக்களின் பெறுமதி மீதி எதிர்வரும் வருடங்களின் போதும் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விற்றுத்தீர்க்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சீராக்கப்பட்ட மீதியைக் கொண்டிருந்தது. சீராக்கப்பட்ட மீதி முன்கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் போது 2008 ஆம் |

| | | |
|---|---|---|
| | | ஆண்டிற்கு முன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி உள்ளடக்கப்பட்டமையால் இந்த மீதி சரியான மீதியாக இல்லாதிருந்தமை தெளிவாகும். அதன் பிரகாரம் இந்த மீதி துரிதமாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

(ஈ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அலுவலகத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கிடைக்கின்ற காசோலைகள், காசுக்கட்டளை போன்றவற்றுக்கான பதிவேடு | | |
| நிதிப் பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமானம் 451 இல் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் ஜீ.ஏ.எம் 83 என்ற படிவத்தின் பிரகாரம் கிடைக்கின்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவதற்கு உரிய பதிவேடு பேணப்பட வேண்டும். | கைதவறினால் உரிய பதிவேட்டில் பதியப்படவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (அ) 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் குறிப்பு இலக்கம் iii இன் கீழ் வருகின்ற | நிதிக் கூற்றுக்களின் (குறிப்பு- iii) இன் கீழ் காண்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள், திறைசேரியினால் | திறைசேரியினால் தயாரிக்கப்படுகின்ற பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உரிய பொறுப்புக்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக திறைசேரியினால் ஒவ்வொரு செலவின தலைப்புக்களுக்கும் உரியதாக விநியோகிக்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றுக்களுடன் இணங்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத எந்தவொரு கடப்பாடோ அல்லது பொறுப்போ முன்னைய ஆண்டின் செலவினமாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்துவைக்கப்பட முடியாது. எவ்வாறாயினும் 2018 இன் நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொர்பான கூற்றில் (குறிப்பு iii) காண்பிக்கப்பட்ட ரூபா 389,837 தொகையான பொறுப்புத் தொகை திறைசேரியினால் ஒவ்வொரு செலவினத் தலைப்புக்களுக்கும் உரியதாக விநியோகிக்கப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்படாதிருந்த போதும் 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | விநியோகிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுக்களுடன் இணங்க வேண்டியிருந்ததுடன் அவ்வாறு அறிக்கையிடப்படாத கடப்பாடோ மற்றும் பொறுப்போ முன்னைய ஆண்டில் செலவினமாக 2019 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைக்கப்படமுடியாது. | காண்பிக்கப்படாமையின் காரணமாக இந்த பிரச்சினை ஏற்பட்டிருந்தமை எதிர் பார்க்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்படும். |
| (ஆ) | 2019 பெப்ரவரி 21 ஆம் திகதிய 35 ஆம் இலக்க உறுதிச்சீட்டின் மூலம் செலுத்தப்பட்ட அலுவலக கட்டிடத்தின் 2018 திசெம்பர் நிலுவை வாடகை ரூபா 110,875 தொகை 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு iv இல்) மற்றும் பொறுப்புப் பதிவேட்டில் காண்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (குறிப்பு iv) மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | கைத்தவறுகளினால் அது பொறுப்புப் பதிவேட்டிலும், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றிலும் பதியப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

3.1.1 ஆணையாளர் அலுவலகத்தின் செயலாற்றல் தொடர்பாக மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபரம் | | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|---|---|---|
| (அ) | பரிசோதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் | | | | | |
| (i) | முன்னைய ஆண்டில் முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகள் | 616 | 457 | 459 | 421 | 527 |
| (ii) | ஆண்டில் கிடைத்த முறைப்பாடுகள் | 1588 | 1380 | 1422 | 1120 | 1087 |
| (iii) | பரிசோதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட மொத்த முறைப்பாடுகள் | 2204 | 1837 | 1881 | 1541 | 1614 |
| (ஆ) | மேற்கூறப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பாக ஆணையாளர் அலுவலகத்தின் தற்போதைய செயல்முன்னேற்றம் கீழே காண்பிக்கப்படுன்றது. | | | | | |
| (i) | பரிசோதனை நடத்தப்பட்ட மற்றும் உள்ளக தரப்பினரின் விசாரணைகளின் பின்னர் அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 16 | 24 | 29 | 27 | 26 |
| (ii) | பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் வகையில் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 40 | 47 | 35 | 28 | 100 |
| (iii) | உரிய நிறுவனங்களிடம் அறிக்கை கோரி அதனை முறைப்பாட்டாளருக்கு அறிவித்ததன் பின்னர் மிகுதி நடவடிக்கைகளுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 379 | 318 | 425 | 388 | 237 |
| (iv) | அறிக்கை கோரியதன் பின்னர் கோரிக்கை நிறைவேற்றப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 109 | 103 | 110 | - | - |
| (v) | விசாரணை மேற்கொள்ளப்படாமல் சமரசத்திற்கு முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 451 | 69 | 100 | 73 | 224 |
| (vi) | ஒரேமாதிரியான நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 730 | 660 | 725 | 566 | 606 |
| பரிசோதனை நடத்துவதற்கும் அறிக்கையிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்ட மிகுதி முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | 479 | 616 | 457 | 459 | 421 |

### 3.2 திட்டமிடல்

#### 3.2.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க செயல் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அலுவலகத்தின் பிரதான நோக்கத்தை அடைந்து கொள்ளாமையினால் உரிய சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகளை கொண்ட செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

#### 3.2.2 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பெறுகை நிறுவனத்தினால் ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளை உள்ளடக்கிய பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்தம் வரையறுக்கப்பட்ட கொள்வனவு அளவுகளினால் குறுகிய காலத்தில் ஏற்படுகின்ற தேவைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றமையால் ஒரு வருடத்திற்காக மாத்திரம் ஆன பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. |
| (ஆ) மீளாய்வாண்டில் பெறுகைத் திட்டம் பெறுகை செயற்பாடுகள் கோவையின் 4.2.1 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படவில்லை. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலகத்திற்கு கொள்வனவு செய்யப்படுகின்ற திணைக்களத்தின் தலைவரினால் அதிகாரம் எல்லைப்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யக்கூடிய குறைந்த பெறுமதியுடைய பொருட்கள் மாத்திரம் கொள்வனவு |

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்படுகின்றது. அவைகள் அநேகமானவை சந்தை ஒப்பீட்டு முறையின் கீழ் கொள்வனவு செய்யப்படுகின்றமையால் பெறுகைத்திட்டம், பெறுகை நடைமுறைக் கோவையின் 4.2.1 படிவத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு வசதியீனமாக இருந்தது. |
| (இ) | 2016 ஆகஸ்ட் 02 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 02/2016 இல் 4.2 ஆம் பந்தியில் (ii) இன் பிரகாரம் சகல மதிப்பீடு செய்யப்பட்ட பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டங்களுக்கு இணங்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் மதிப்பீட்டு நிதிஏற்பாடு ரூபா 1,500,000 ஆக இருந்த போதிலும் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 2,917,000 ஆகவும் இருந்தமையால் மதிப்பீட்டு நிதிஏற்பாடு ரூபா 1,417,000 இனால் விஞ்சி மீளாய்வாண்டின் பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக பெறுகைத்திட்டம் தயாரிப்பதற்கு முன் 2018 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனால் உங்களின் பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான முரண்பாடுகளைக் குறைக்கும் வகையில் பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முறைப்பாட்டு நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கான மென்பொருள் முறைமை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு ரூபா 500,000 தொகை மற்றும் அலுவலக கணனி வலையமைப்பை செய்வதற்காக ரூபா 150,000 தொகை என்பன 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த போதும் | திட்டமிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிதிஏற்பாடு காணப்படாமையினால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடிய விடயங்களின் காரணமாக மென்பொருள் |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மேற்கூறப்பட்ட பணிகள் பூர்த்திசெய்யப்படவில்லை. | | முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கும் கணனி வலையமைப்பை செய்வதற்கும் தாமதம் ஏற்பட்டிருந்தது. இந்த ஆண்டில் மேற்கூறப்பட்ட பணிகளுக்காக நிதிஏற்பாடு கிடைத்ததன் பின்னர் அந்தப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 பெறுகைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுகையாக பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 622,000 தொகையான கொள்வனவுகள் ஆண்டின் போது மேற்கொள்ளப்படவில்லை. | திட்டமிடப்பபட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக கிடைக்கின்ற நிதிஏற்பாட்டு அளவின் பிரகாரம் ஆண்டின் போது தேவையான அலுவலக உபகரணங்கள் மாத்திரமே கொள்வனவு செய்யப்படுகின்றது. |
| (ஆ) மீளாய்வாண்டின் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 128,355 பெறுமதியான உபகரணங்கள் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | திட்டமிடப்பபட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய கைவிரல் அடையாள இயந்திரம் ஒன்று, கணனி மேசை மற்றும் UPS உபகரணங்கள் 06 என்பன அவசர தேவையினால் பெறுகைத் திட்டத்திற்கு புறம்பாக கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. |

**3.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரையிலும் சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதற்காக அமைச்சரவைத் தீர்மானம் கிடைத்தன் பின்னர் சனாதிபதி செயலகத்தின் மூலம் எதிர்காலத்தில் எங்களுக்கு அறிவித்ததன் பின்னர் தேவையான இறுவெட்டுக்கள் (CD) மற்றும் வன்பொருள் பிரதி என்பன அச்சிடப்பட்டு பாராளுமன்றத்தில் சபாநாயகர் அலுவலத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 32 மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 23 ஆக இருந்தமையால் வெற்றிடம் 09 காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் போது வெற்றிடமான 04 பதவிகள் நிரப்பப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டில் 01 பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. |
| (ஆ) பல ஆண்டுகள் வெற்றிடமாக காணப்படுகின்ற நிர்வாக உத்தியோகத்தர் (முறைப்பாடுகள்) பதவிக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு கோரி 2017 மார்ச் 29 திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்த போதும் அந்த வெற்றிடம் அவ்வாறே காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமாக காணப்படுகின்ற நிர்வாக உத்தியோகத்தர் பதவியை நிரப்புமாறு 2017 மார்ச் 29 ஆம் திகதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதுடன் இது வரையிலும் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படவில் லை. |
| (இ) 2018 ஆம் ஆண்டு நிரந்தர சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 23 | பதவியணியினருக்கு பயிற்சி வழங்கப்பட | பதவியணியில் உத்தியோகத்தர்களி |

| | | | |
|---|---|---|---|
| உத்தியோகத்தர்கள் இருந்த போதும் அதில் 03 உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஆண்டில் பயிற்சிகளுக்காக அனுப்பப்பட்டிருந்தனர். | வேண்டும். | | ன் பயிற்சிப் பாடநெறிக்காக விண்ணப்பப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்டாமை மற்றும் பங்குபற்றிய பயிற்சிப் பாடநெறிகளும் இலவசமாக நடத்தப்பட்டமையினால் ஏற்பட்டிருந்தது. |